

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.9.2023) செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் சென்னை, இராணி மேரி கல்லூரி வளாகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து, அதன் அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் த. வேலு, இ. பரந்தாமன், ஏ.எம்.வி. பிரபாகரராஜா, துணை மேயர் மு. மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.9.2023) தலைமைச் செயலகத்தில், சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறை சார்பில் சாலை விபத்தில் சிக்கியவர்களை விபத்துக்குள்ளான வாகனங்களில் இருந்து மீட்டெடுக்கும் பணிக்கான "வீரா (VEERA – Vehicle for Extrication in Emergency Rescue and Accidents) அவசரகால மீட்பு மற்றும் விபத்துக்களிலிருந்து மீட்கும் வாகனத்தின் பயன்பாட்டினை கொடியசைத்து தொடங்கி வைத்து, காவல்துறையினரின் செயல்முறை விளக்கத்தை (Demo) பார்வையிட்டார். இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி. பெ. அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் சங்கர் ஜிவால், சென்னை பெருநகர காவல் ஆணையர் சந்திப் ராய் ரத்தோட், காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.9.2023) தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பில் புதுக்கோட்டை, இராணிப்பேட்டை மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் 7 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மூன்று கிடங்குகளை திறந்து வைத்து, திருப்பூர் மற்றும் திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களில் 6 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 2 கிடங்குகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர் முனைவர் டி.ஜகந்நாதன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சு.பழனிசாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் ஆ.அண்ணாதுரை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு ஆளுநரின் செயல்பாடுகளை சரி செய்ய உச்சநீதிமன்றம் தானாக தலையிடுமா?



டாக்டர் **வி.ஆர்.எஸ்.சம்பத்**
வழக்கறிஞர்
ஆசிரியர் – சட்டக்கதிர்

தமிழ்நாடு ஆளுநராக ஆர்.என்.ரவி பதவியேற்ற நாள் முதலாகத் தொடர்ந்து தமிழ்நாடு அரசின் திட்டத்திற்கும் சட்டத்திற்கும் தீர்மானத்திற்கும் கோப்புகளுக்கு ஒப்புதல் வழங்குவதில் பெரிதும் கால தாமதம் செய்து வருகிறார். அவருக்கு ஆலோசனை கூற, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் அமைச்சரும் அமைச்சரவை யும் பணியாற்றும் என்று நமது அரசியல் கூட்டம் கூறுகிறது. அதன்படி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இயங்கும் அமைச்சரவை நிறைவேற்றும் தீர்மானத்தை, ஆலோசனைகளை, கோப்புகளை ஆளுநர் அவர்கள் ஏற்று ஒப்புதல் வழங்க வேண்டும்.

ஆனால், நமது ஆளுநர் அரசு அனுப்பும் கோப்புகளை நிறுத்தி வைக்கிறார். கால தாமதம் செய்கிறார். தடை செய்கிறார். நமது செய்தித்தாள்களும் சமூக வலைத் தளங்களும் இது குறித்து தினமும் செய்திகள் வெளியிடுகின்றன.

அரசியலமைப்புச் சட்டத்தின்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு, ஆட்சி செய்ய அதிகாரம் பெற்றது. அவர்கள் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு ஒப்புதல் அளிப்பது ஆளுநரின் கடமையாகும். ஆனால் ஆளுநர் (ஆர்.என்.ரவி) சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களுக்கு ஒப்புதல் வழங்க தாமதப்படுத்துகிறார் அல்லது மறுக்கிறார். இது குறித்து விளக்கங்கள் கோர வேண்டுமென்றால் கூட அமைச்சரவையின் செயலாளரான தலைமைச் செயலாளரிடம் கோர வேண்டும். இதுகுறித்து வேறு ஒருவருக்கும் கடிதம் எழுதவோ, தொலைபேசியில் தொடர்பு கொள்ளவோ அரசியலமைப்புச் சட்டத்தில் எந்த அனுமதியும் இல்லை.

மாநில அரசு தலைமையில் அனைத்து நடவடிக்கைகளும் ஆளுநரின் பெயரால் நடைபெறுமே தவிர அவரால் நேரிடையாக எதையும் செய்ய முடியாது. அதனால் நமது ஆளுநர் அவர்கள் யாரிடமும் நேரடியாகவே தொடர்பு கொண்டு எதையும் கேட்க உரிமையற்றவராகிடுவார். அவருக்கு ஆலோசனை வழங்க முதலமைச்சர் உள்ளார். ஏனெனில் ஆளுநர் தலைமையில் ஆட்சி செய்ய மக்கள் வாக்களித்து தேர்ந்தெடுத்த அமைச்சரவையே அனைத்து அதிகாரங்களைப் பெற்றது. அவர்களின் கட்டளைகளை செயல்படுத்த, பணியாற்ற தலைமைச் செயலாளர் மற்றும் அரசு செயலாளர்கள் உள்ளார்கள். அவர்களின் ஆலோசனைகளை ஒப்புதல் அளிக்க ஆளுநர் இருக்கிறார். ஆனால் ஆளுநர் நேரடியாக செய்தித்தாள்களுக்கு செய்தி தருகிறார். ஆளுநர் மாளிகையில் கூட்டங்களை நடத்துகிறார். மாநில கொள்கைகளுக்கு எதிராக சொற்பொழிவு ஆற்றுகிறார். புதிய விளக்கத்தினைத் தருகிறார். அவர் தலைமையில் இயங்கி வரும் அரசு செய்யும் செயலை நம்ப மறுக்கிறார். அப்படியென்றால் வாக்களித்து மக்களால் தேர்ந்தெடுத்த அரசாங்கத்தை ஏற்க மறுக்கிறார் என்று தானே அர்த்தம்.

மாநில அரசும், ஆளுநரும் சுமூகமாக இயங்குவது அரசியலமைப்புச் சட்டத்தின் முக்கிய கூறாகும். இந்திய அரசியல் சட்டம் மாநிலங்கள் அடங்கிய இந்திய ஒன்றியம் என்றே கூறுகிறது. ஆளுநர், அவரின் நியமனம், அதிகாரம், அமைச்சரவை, முதலமைச்சர் என விரிவான பிரிவுகள் நமது அரசியல் சட்டத்தில் உள்ளன. ஆனால் ஆளுநர் கற்றறிந்த சிவில் காவல் துறை அதிகாரியாகப் (IPS) பணிபுரிந்தவர் இப்படி இயங்குவது ஆச்சரியமாய் உள்ளது.

ஆளுநர் என்பதால் அவருக்குப் பல்கலைக்கழக வேந்தர் பதவி வழங்கப்பட்டது. வேந்தர் என்பவர் உண்மையில் தமிழ்நாடு அரசும் அமைச்சரவையும்தான் என பொருள் கொள்ள வேண்டும். அதனால்தான் ஆளுநர் அவர்களை வேந்தராக தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது. ஆனால் ஆளுநர் தானே பல்கலைக்கழக வேந்தர் என்று நினைத்துக் கொண்டு சொந்தமாக முடிவு எடுக்கிறார். துணைவேந்தர்கள் கூட்டத்தை கூட்டுகிறார். பல்கலைக்கழக பேராசிரியர்களை ஆளுநர் மாளிகைக்கு அழைக்கிறார். சுற்றறிக்கை அனுப்புகிறார்.

ஒன்றிய அரசால் நடத்தப்படும் மத்திய பல்கலைக்கழகங்களுக்குக் குடியரசுத் தலைவர் visitor பார்வையாளராக, வேந்தராக உள்ளார். அவரின் அனைத்து அதிகாரங்களும் கல்வியாளர் ஒருவருக்கு மாற்றி கொடுத்து அவரை பல்கலைக்கழக தலைவராக (President) பணியாற்ற அனுமதிக்கிறார். நமது குடியரசுத் தலைவர் மேலும் ஒன்றிய அரசின் பரிந்துரைப்படி துணைவேந்தரை நியமிக்கிறார். துணை வேந்தர் நியமனங் களை ஒன்றிய அரசே முடிவு செய்கிறது. குடியரசு தலைவர் இதில் எந்த சுயமுடிவு எடுப்பதில்லை. தன் சொந்த முடிவுகள் எதையும் எடுப்பதில்லை.

குடியரசுத் தலைவர் தேர்தல் மூலம் மக்கள் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஆனால் ஆளுநரைக் குடியரசுத் தலைவர்தான் நியமனம் செய்கிறார். நியமன ஆளுநர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசின் சொல்படி துணை வேந்தரை நியமிக்க மறுக்கிறார் தடுத்து நிறுத்துகிறார். சுயமாக தான் விரும்பும் ஒருவரை நியமிக்கிறார்.

அரசியலமைப்புச் சட்டத்தின்படி, முதல் அமைச்சரின் ஆலோசனை பெறாமல் எந்த முடிவையும் எடுக்க முடியாது. ஆனால் ஆளுநர் எந்த முடிவையும் அவராகவே எடுத்து விடுகிறார்.

சட்டமன்றத்தில் அரசின் கொள்கைகளை, சட்டமன்ற முதல் கூட்டத்தின்போது படிக்கச் சொன்னால் மாநில அரசின் செயல்பாடுகளைத் தவிர்த்து விட்டு படிக்கிறார்.

தமிழ்நாடு அரசு, சட்டமன்றத்தில் இயற்றி அனுப்பிய 13 மசோதாக்கள் ஆளுநரின் ஒப்புதலுக்காக காத்திருக்கின்றன.

நீட் தேர்வுக்கு விதிவிலக்கு கிடைக்குமா எனப் பெற்றோர்கள் கேட்டால் "நான் ஒரு நாளும் கையெழுத்து போட மாட்டேன்" என்று சொல்லுகிறார்.

அமைச்சரை நீக்க ஆளுநருக்கு அதிகாரம் இல்லை. ஆனால் அவரே அமைச்சரை நீக்க உத்தரவிட்டு, பிறகு நிறுத்தி வைக்கிறார்.

ஒன்றிய அரசு தனது அதிகாரத்தின் அடிப்படையில் தமிழ்நாட்டின் ஆளுநராக திரு. ஆர்.என்.ரவி அவர்களை நியமிக்க குடியரசுத் தலைவருக்குக் கோப்புகளை அனுப்பினார்களே அதே அடிப்படையில்தான் TNPSC தலைவர் மற்றும் உறுப்பினர்களை தேர்வு செய்து மாநில அரசு ஆளுநருக்கு அனுப்பியுள்ளது. அதையும் நிராகரித்துள்ளார்.

தமிழ்நாடு அரசின் பொதுப் பாடத்திட்டம் கட்டாயமில்லை. யு.ஜி.சி. விதிகளுக்கு மாறாக பொதுப் பாடத்திட்டத்தைக் கொண்டு வர முடியாது எனப் பல்கலைக்கழகத் துணை வேந்தர்களுக்குச் சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார்.

இதேபோல, தெலுங்கானா, ராஜஸ்தான், பஞ்சாப், மேற்கு வங்கம் போன்ற பல்வேறு மாநிலங்களில் பிரச்சினை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இதனால் மாநில நிர்வாகம் பெரிதும் பாதிக்கப்படுகிறது. ஒன்றிய உள்துறை அமைச்சகம் எப்படி இதை எல்லாம் அனுமதிக்கிறது.

G20 மாநாடு நடைபெறும் இவ்வேளையில் மாநில ஆளுநர் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராக நடந்தால், இந்திய ஜனநாயகத்தைப் பற்றியும் கூட்டாட்சி பற்றியும் மாநில உரிமை பற்றியும் G20 நாடுகள் என்ன நினைக்கும் என்பதைப் பற்றி நமது ஒன்றிய அரசு யோசித்துப் பார்க்க வேண்டும்.

இது குறித்து உச்சநீதிமன்றம் தானாகவே முன்வந்து (Suomoto) ஆளுநர் அவர்களின் செயல்முறை (Working method) குறித்து விரிவான சட்டமுறைகளைத் தீர்ப்பாக வழங்க வேண்டும். இதன் மூலம் இந்திய ஒன்றியக் கூட்டாட்சி தத்துவ செயல்பாடு மேலும் சிறப்புப் பெறும்.

இயக்குநர் – நடிகர்

## மாரிமுத்து மறைவு - தமிழ்த் திரையுலகுக்கு பேரிழப்பாகும்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



'சென்னை, செப். 10-

இயக்குநர்-நடிகர் மாரிமுத்து அவர்களின் மறைவு தமிழ்த் திரையுலகுக்கு நிச்சயம் ஒரு பேரிழப்பாகும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இயக்குநரும், நடிகருமான மாரிமுத்து அவர்களின் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

கண்ணும் கண்ணும், புலிவால் ஆகிய திரைப்படங்களின் இயக்குநரும், பிரபல நடிகருமான திரு. மாரிமுத்து அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

தேனி மாவட்டத்தில் இருந்து சினிமா கனவுகளுடன் சென்னை வந்து, பல்லாண்டுகள் உதவி இயக்குநராகப் பணிபுரிந்து, இயக்குநர் ஆனவர் திரு. மாரிமுத்து அவர்கள். ஐம்பதுக்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்து, யதார்த்தமான நடிகராகவும் பாராட்டப்பட்டவர். மேலும், சின்னத்திரையிலும் தனது நடிப்புத் திறனால் தமிழ்நாட்டின் ஒவ்வொரு இல்லத்திலும் அறிமுகமானவராகப் புகழ்பெற்றார்.

மேலும், பல நேர்காணல்களிலும் நிகழ்ச்சிகளிலும் இவரது பேச்சுகள் மூடநம்பிக்கைகளுக்கு எதிரான விழிப்புணர்வை மக்களிடையே கொண்டு சேர்க்கும் வகையில் அமைந்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

அவரது மறைவு தமிழ்த்திரையுலகுக்கு நிச்சயம் ஒரு பேரிழப்பாகும். அன்னாரை இழந்து துயரில் ஆழ்ந்துள்ள அவரது குடும்பத்தினருக்கும், திரைத்துறை நண்பர்களுக்கும், இரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

## நாமக்கல் மேற்கு மாவட்ட செயற்குழு கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிவிப்பு!



*நாமக்கல் செப் 10 -*

*இதுகுறித்து நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-*

*நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் இன்று (10.09.2023 ஞாயிற்றுக் கிழமை) திருச்செங்கோடு, வேலூர் ரோடு, மாவட்ட கழக அலுவலகத்தில் தளபதியார் அரங்கில் காலை 10.00 மணிக்கு நடைபெற உள்ளது . மாவட்ட அவைத் தலைவர் இரா. நடனசபாபதி தலைமை தாங்குகிறார். நடைபெற உள்ள கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொது குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள் மற்றும் அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.*

*இக்கூட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழா, செப்டம்பர் 17 ல் வேலூரில் நடைபெறவுள்ள கழக முப்பெரும் விழா, கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முக.ஸ்டாலின் தலைமையில் 24.09.2023 அன்று நடைபெறவுள்ள காங்கேயம் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பாசறைக்கூட்டம் (BLA2) தொடர்பாக, கழக ஆக்கப் பணிகள் உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது என அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.*

## தஞ்சை மத்திய மாவட்டம்

### தஞ்சை மாநகரம்,18, 47, 46 ஆகிய வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

தஞ்சை மத்திய மாவட்டம், தஞ்சை மாநகரம், கோட்டை பகுதி, 18வது வட்டக் கழகச் செயலாளர் எம்.கண்ணன் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **திரு. ஆர். அமர்நாத்**, (45/1350, மேல அலங்கம், தஞ்சாவூர்) அவர்கள், 18வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்;

மருத்துவக் கல்லூரி பகுதி, 47வது வட்டக் கழகச் செயலாளர் டி.சுந்தர்ராஜ் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **திரு. அ. நிமல்பிரசாத்,** (9/4, 2வது தெரு, சுப்ரமணியபுரம், எம்.சி.சாலை, தஞ்சாவூர் - 4) அவர்கள் 47வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்; 46வது வட்டக் கழகச் செயலாளர் பூமிநாதன் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **திரு. ஜி.முத்துகுமாரசாமி,** (3, முதல் தெரு, ஸ்ரீராம்நகர், ஈஸ்வரி நகர், எம்.சி.சாலை, தஞ்சாவூர் - 613 004) அவர்கள், 47வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 8.9.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## சேலம் மத்திய மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



*சேலம், செப். 10-*

*சேலம் மத்திய மாவட்ட கழக செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் நாளை (11.09.2023 - திங்கட்கிழமை) காலை 10.30 மணிக்கு மாவட்ட கழக அவைத் தலைவர் ஜி.கே.சுபாசு தலைமையில் மாவட்ட கழக அலுவலகம் - கலைஞர் மாளிகையில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக செயலாளர்கள், பகுதி கழக செயலாளர்கள், பேரூர் கழக செயலாளர்கள், மாநகர கோட்டக் கழக செயலாளர்கள், மாவட்ட இளைஞர் அணி, சேலம் மாநகர இளைஞர் அணி - அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் ஒன்றிய, பகுதி, பேரூர் இளைஞர்அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.*

*பொருள் 1. கழக இளைஞர் அணி செயலாளர் அவர்கள். சேலம் வருகை.*

*2. அண்ணா பிறந்தநாள் விழா*

*3. மேற்கு மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சி பாசறை கூட்டம்.*

*இவ்வாறு மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.*